பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 20 செவ்வாய்க்கிழமை 03.06.2025 | அதிர்வு 304

## கெஹலியவும் மகனும் பிணையில் விடுவிப்பு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன்

02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான

# இலங்கை அரசின் வேலைத்திட்டங்களுக்கு ஆஸியின் பிரதிப் பிரதமர் நேரில் பாராட்டு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஆஸ்திரேலியாவின் பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ/க்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை பொருளாதார ரீதியில் நிலையான பயணத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார, ஊழல் மற்றும் மோசடியை ஒழிக்க தற்போதைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ரிச்சர்ட் மார்ல்ஸைத் தெளிவுபடுத்தினார்.

02▶



### குடும்பத் தகராறு கொலையில் முடிந்தது

# மனைவியின் தலையுடன் கணவன் பொலிஸில் சரண்

## வவுனியாவில் பயங்கரம்

(கி.வசந்தன்)

தனது மனைவியை வெட்டிப் படுகொலை செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் கணவன் மனைவியின் தலையுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இந்தப் பயங்கரச் சம்பவம் வவுனியா, புளியங்குளம் பகுதியில் இன்று இடம்பெற்றுள்ளது.

புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு இன்று காலை மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர், கையில் இருந்த பொலித்தீன் பையினுள் தனது மனைவியின் தலை இருப்பதாகவும், அவரைக் கொலை செய்து காட்டுப் பகுதியில் உடலை விட்டு வந்துள்ளதாகவும் கூறினார்.

02▶



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



**இலங்கை அரசின்...**

கடந்த காலத்தில் சமுத்திரப் பாதுகாப்பு, சட்டவிரோத வர்த்தகம், ஆள் கடத்தல், பயங்கரவாதம் மற்றும் ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் செயற்பாடுகளுக்கு ஆஸ்திரேலிய அரசு வழங்கிய உதவிகளை இதன்போது ஜனாதிபதி பாராட்டினார்.

சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கைகளுக்கு இலங்கை மிகவும் பாதுகாப்பான நாடு என ஜனாதிபதி அநுரகுமார இங்கு சுட்டிக்காட்டினார்.

இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையிலான 70 வருட பொருளாதார மற்றும் வர்த்தகத் தொடர்புகளை நினைவுகூர்ந்த பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் இலங்கை அரசுடன் நெருக்கமாகச் செயற்படுவதே தமது அரசின் எதிர்பார்ப்பு என்றும் குறிப்பிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான இலங்கை அரசின் வேலைத்திட்டத்தை ஆஸ்திரேலிய அரசு பாராட்டுவதாகவும், வர்த்தகம், பொருளாதாரம், அரசியல், சுற்றுலா மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துவது, இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் ரிச்சர்ட் மார்லஸ் இங்கு தெரிவித்தார்.

ஆஸ்திரேலியப் பிரதிப் பிரதமருடன் இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாளர் கிரகரி லோரன்ஸ் மொரியாட்டி, பிரதிப் பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் சைமன் எரிக் ஓ' கொணர், இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர் ஆகியோரும் இதன்போது இணைந்துகொண்டிருந்ததோடு, இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப் படுத்தி ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே உள்ளிட்டவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.





**கெஹலியவும்...**

ரமித் ரம்புக்வெல ஆகியோரைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோர் இன்று செவ்வாய்க்கிழமை காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோர் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**மனைவியின்...**

இதனால்அதிர்ச்சியடைந்தபொலிஸார், யாழ்ப்பாணத்தை சேர்ந்த கோ.சுகிர்தரன் என்ற நபரை உடனடியாகக் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் சின்னபூவரசன் குளத்தில் அமைந்துள்ள காட்டுப் பகுதியில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அனந்தர் புளியங்குளம், நொச்சிகுளத்தைச் சேர்ந்த ஆசிரியையான சுகிர்தரன் சுவர்ணலதா வயது 32 என்ற பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார். அவர் கர்ப்பிணிப் பெண் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கணவன் – மனைவி இருவருக்கும் இடையில் நீண்ட காலமாகக் குடும்பத் தகராறு நிலவி வந்துள்ளது.

இந்நிலையில் மனைவியைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்த கணவன், இன்று காலை நொச்சிகுளம் பகுதியில் இருந்து மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் புளியங்குளம் நோக்கிச் சென்று அங்கு வைத்து அவரைக் கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாகப் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# ஒரு சில இடங்களிலாவது ஏனையோருக்கு விட்டுக்கொடுக்க முன்வந்திருக்க வேண்டும்

## தமிழரசைக் கடுமையாகச் சாடும் சங்கின் செயலாளர்

**(கி.வசந்தன்)**

“பெரிய தாய்க் கட்சி என்று சொல்லிக் கொள்கின்ற ஒரு கட்சி ஒரு சில இடங்களிலாவது ஏனையோருக்கு விட்டுக் கொடுக்கும் மனநிலைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை.” – என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்கு) செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கம் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சி ஒன்று தமிழர்களுடைய நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும். அதற்கு ஏனையோரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

முதலில் நாம் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன்தான் பேச்சுகளை முன்னெடுத்திருந்தோம். எனினும், எந்த விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. அவர்களுக்கு இருக்கும் உள்ளகப் பிரச்சினையா அல்லது அந்த உறுப்பினர்களின் மனநிலையா என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆனால், ஒரு பெரிய தாய்க் கட்சி என்று சொல்லிக்கொள்கின்ற ஒரு கட்சி ஒரு சில இடங்களிலாவது ஏனையோருக்கு விட்டுக்கொடுக்கும் மனநிலைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை.

அந்தவகையில்தான் அவர்களுடன் பேச்சில் ஈடுபட்ட அதைவேளை தமிழ்த் தேசியப் பேரவையுடனும் பேச்சில் ஈடுபட்டிருந்தோம். தமிழ்த் தேசியப் பேரவையைப் பொறுத்த வரையில் சில சபைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும் எமக்குச் சில சபைகளை விட்டுக் கொடுப்பதற்கும் முன்வந்திருந்தார்கள்.

அந்தவகையில் நாங்கள் அவர்களுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்திருக்கின்றோம். அரசியலில் நாங்கள் வெறுமனே உறுப்பினர்களாக இருந்து விட்டு நான்கு வருடங்கள் முடிந்ததன் பின்னர் எமது கட்சியின் இருப்பிடம் எங்கே என்று தெரியாத அளவுக்குப் போய்விடுவோம். ஆகவே, அரசியலில் இது சாதாரணமான விடயம்.

அதிகாரம் இருந்தால் மாத்திரமே ஓர் அரசியல் கட்சி ஈர்ப்புடன் இருக்க முடியும். ஆகவே, நாங்கள் ஏனைய கட்சிகளுக்குப் பாரிய மோசமான நிலையை ஏற்படுத்தாத வகையில் சாதகமான இடங்களில் ஆட்சி அமைப்பதற்கான செயற்பாடுகளை நாங்கள் செய்திருக்கின்றோம். ஆகவே, நாங்கள் சில சபைகளில் ஆட்சி அமைக்கலாம் என்று எண்ணுகின்றோம். வவுனியா மாநகர சபையிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சி அமைக்கும்.” – என்றார்.

# பஸ்ஸில் ஏற முயன்ற வயோதிபர் சில்லுக்குள் சிக்கி பரிதாப மரணம்

குருணாகலில் போதிராஜா மாவத்தைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.


குருணாகலில் இருந்து மெல்சிறிபுர நோக்கிப் பயணித்த பஸ்ஸில் ஏற முயன்ற வயோதிபர் ஒருவர் தவறி வீழ்ந்து பஸ் சில்லுக்குள் சிக்கிப் படுகாயமடைந்தார்.

அவர் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொழும்பு – கல்கிஸ்ஸை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிபர் ஆவார்.

இது தொடர்பில் குருணாகல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பேரழிவைத் தடுக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு டக்ளஸ் கடிதம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் எமது கடல் வளத்தையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துப் பேரழிவைத் தடுக்குமாறு கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டியதும், சட்டவிரோதமானதுமான இந்திய இழுவை மடி வலைப் படகுகளின் தொழில் செயற்பாடுகள் காரணமாக எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களும், கடல் வளமும் பாரிய ளவில் பாதிக்கப்பட்டு வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இத்தகைய செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நாமும் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தும், அவை முழுமை பெறவில்லை.

தற்போது மீனினங்களின் இனப் பெருக்கக் காலம் என்பதால் இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் தொழில் நிமித்தம் வருவதில்லை. இது ஒவ்வொரு வருடமும் நிகழ்வதாகும்.

அந்தவகையில் இந்த வருடம் இக் காலகட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி தொடங்கி எதிர்வரும் 15ஆம் திகதி முடிவடைகின்றது.

இந்தக் காலகட்டம் முடிவடைந்த நிலையில் - அதாவது எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் ஆயிரக்கணக்கிலான இந்திய இழுவை மடி வலைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நிச்சயமாக வரும்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் தங்களது அவதானத்தைச் செலுத்தி, ஒரு பக்கத்தில் இது தொடர்பான இராஜதந்திர ரீதியிலான பேச்சுகளை இந்திய அரசுடன் மேற்கொண்டும், மறு பக்கத்தில் இலங்கையில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டும், இந்திய இழுவை மடி வலைப் படகுகளின் இலங்கைக் கடற்பரப்புக்குள்ளான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்." - என்றுள்ளது.

### பகிடிவதை காரணமாக

# உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற பல்கலை மாணவி!

### நான்கு மாணவர்கள் கைது

குருணாகலில் உள்ள குளியாப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் பகிடிவதை காரணமாக உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற சம்பவம் தொடர்பில் நான்கு மாணவர்கள் குளியாப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்கும் நான்கு மாணவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, குளியாப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் கல்லூரிக்கு அருகில் உள்ள வாவியில் குதித்துள்ளார்.

பின்னர் பிரதேசவாசிகள் சிலர் இணைந்து மாணவியைக் காப்பாற்றி குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த மாணவி, கல்லூரியில் இடம்பெறும் பகிடிவதை காரணமாக தனது உயிரை மாய்த்துக்கொள்ள முயன்று வாவியில் குதித்துள்ளார் என்று பொ-லிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகநபர்களான நான்கு மாணவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலைக்கு முன்னால் போதைப்பொருள் விற்பனை செய்த இளைஞர் ஒருவர் கைது!

கொழும்பு, மாலம்பே பிரதேசத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் போதைப்பொருள் விற்பனை செய்து வந்த இளைஞர் ஒருவர் வலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலான ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கடுவலை பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய இளைஞர் ஆவார்.

சந்தேகநபரான இளைஞரிடமிருந்து 480 கிராம் கொக்கேயின், 71 கிராம் குஷ் மற்றும் 50 கிராம் ஹேஷ் உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வலான ஊழல் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்கள் பண்டாரவன்னியன் சிலை முன் சத்தியப்பிரமாணம்

(கி.வசந்தன்)

ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் சார்பில் வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகம் அருகாமையில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் நினைவுச் சிலைக்கு முன்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஜனநாயகத் தேசியக் கூட்டணியானது கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் ஐந்து உறுப்பினர்களைப் பெற்றிருந்தது.

அந்தவகையில் வவுனியா மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பரமேஸ்வரன் கார்த்தீபன், செட்டிகுளம் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள சங்கரன் சசிக்குமார், இராசரத்தினம் லிங்கேஸ்வரன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வீரசிங்கம் ஸ்ரீதரன் மற்றும் சதாநந்தம் சுகிர்தன் ஆகியோர் தமது சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டனர்.

இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வு சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (சிறிரெலா) செயலாளர் ப.உதயராசாவின் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.







# சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் பண்ணையைச் சுத்தப்படுத்தும் நிகழ்வு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், பண்ணைக் கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்வு யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் இன்று நடைபெற்றது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பிளாஸ்டிக் மூலம் ஏற்படும் மாசை இல்லாது ஒழிப்போம் எனும் 2025 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல் தொனிப்பொருளுக்கு அமைவாக சுற்றாடல் வாரமானது மே மாதம் 30 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை கொண்டாடப்படுகின்றது.

இதனடிப்படையில் யாழ். பண்ணைக் கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்வு யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் அதிகார சபையின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் தவகிருபா தலைமையில் இன்று காலை இடம்பெற்றது.

இதன்போது பண்ணைக் கடற்கரை வளாகத்தில் காணப்பட்ட கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு தூய்மைப்படுத்தல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் சூரியராஜா, யாழ். மாவட்ட விசேட அதிரடிப் படை பொறுப்பதிகாரி டி.எல் .இகலகமகே, மத்திய சுற்றாடல் அதிகார சபையினர், யாழ். பொலிஸ் நிலையச் சுற்றாடல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினர், கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாநகர சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் தன்னார்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









# வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயப் பிரதான வீதிக்குக் காப்பற் இடும் பணி ஆரம்பம்

(கி.வசந்தன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயப் பிரதான வீதிக்குக் காப்பற் இடும் பணி இன்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 24 மில்லியன் ரூபா செலவில் 1.75 கிலோமீற்றர் காப்பற் வீதியும், மீதமாக உள்ள 4.35 கிலோமீற்றர் வீதிக்குக் கிரவலும் போடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மற்றொரு மனிதப் புதைகுழி!

மூன்று தசாப்த கால கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் மற்றொரு மனிதப் புதைகுழி வெளிப்படத் தொடங்கியிருக்கின்றது.

வடக்கு யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் மீளக் கைப்பற்றிய காலகட்டத்தில் அப்பிரதேசங்களைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் - குறிப்பாக இளைஞர், யுவதிகள் - நள்ளிரவு நேரம் வீடுகளில் இருந்து கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். அத்தகையோர் கொன்று செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று பலத்த சந்தேகங்கள் நிலவும் சூழ்நிலையில், இப்போது அதே செம்மணியில் சிறுவர்கள், பெண்கள் எனப் பலரின் எலும்புக் கூடுகள் அடங்கிய மனிதப் புதைகுழி ஒன்று வெளிப்படுவதற்கான சாத்தியங்கள் தென்பட்டுள்ளன.

இப்பகுதியில் சுண்டுக்குழி பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி படையினரால் கொடூரமாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், அவரும் அவரது தாயாரும், சகோதரரும், அயலவரும் கொன்று புதைக்கப்பட்ட கொடூரத்தில் குற்றவாளிகளாக காணப்பட்ட படையினர், இதுபோன்று செம்மணியில் பல டசின் கணக்கானோர் கொன்று புதைக்கப்பட்டனர் என்ற தகவலை வெளியிட்டிருந்தனர். அவர்கள் அடையாளம் காட்டிய இடங்களில் ஒன்றரை டசினுக்கும் அதிகமான மனித உடலங்கள் அப்போதே கண்டுபிடிக்கப்பட்டன.

இப்போது அதை ஒட்டிய செம்மணியில்தான் புதிதாக மனித புதைகுழி ஒன்று வெளிப்படும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

செம்மணி தரவை சில பல கிலோமீட்டர்கள் நீள, அகலம் கொண்ட வெறும் தரிசு நிலங்களையும், மழைகாலத்தில் தண்ணீர் தேங்கி நிற்கும் நீர்ப் பிரதேசங்களையும் கொண்டது. அந்தப் பிரதேசத்தில் இதைப் போன்று மேலும் பல மனிதப் புதைகுழிகள் இருக்கும் என்று சந்தேகிக்கப்படும் பின்னணியிலேயே இப்போது அதில் ஒன்று வெளிப்படத் தொடங்கி இருக்கின்றது.

இலங்கையில் கடந்த 30 வருடகாலமாக அடையாளம் காணப்பட்ட சுமார் 20 மனிதப் புதைக்குழிகள் தொடர்பிலான விசாரணைகளை அரசாங்கம் முழுமையாக முன்னெடுக்கவில்லை என நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் கூட்டாக தயாரிக்கப்பட்ட அறிக்கையிலேயே குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் பல்வேறு காலப் பகுதிகளில் நடைபெற்ற மோதல்களின் போது, பாரிய மனிதப் புதைக் குழிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன என அந்தக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட புதைக்குழிகளில் இன்னும் பல்லாயிரக்கணக்கான சடலங்கள் புதையுண்டுள்ளன எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்படி மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை தொடர்பில் சட்டரீதியான - திருப்தி தரக்கூடிய - தொடர் நடவடிக்கைகள் இலங்கையில் எடுக்கப்படுவதில்லை என்பதுதான் கடந்த கால அனுபவம். துரையப்பா விளையாட்டு அரங்கில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் தொடங்கி பல கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. மிருசுவில் மனிதப் புதைகுழி விடயத்தைத் தவிர, மற்றைய புதைகுழிகள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எவையும் இலங்கை அரசு தரப்பினால் பூர்த்தி செய்யப்படவேயில்லை. இப்போது செம்மணியில் கண்டுபிடிக்கப்படக் கூடிய மனிதப் புதைகுடியின் கதை கூட அப்படித்தான் முடியும் என்பதை இப்போதே உறுதியாகக் கூறிவிடலாம். ஏனெனில் இலங்கையின் சட்டத்தின் ஆட்சி அந்த மட்டத்தில்தான் இருக்கின்றது

# யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்

## அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்த சூழ்நிலையால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் ஒன்றுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 ஆண்டுகளாக நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக குறித்த பிரதேசங்களில் வாழ்ந்த குடும்பங்களது பெரும் எண்ணிக்கையான வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த மாகாணங்களில் 2009 ஆண்டில் இருந்து இதுவரை 274,728 குடும்பங்களைச் சேர்ந்த 914,722 நபர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் 2024 ஆண்டின் இறுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 08 மாவட்டங்களில் 150,488 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு இலங்கை அரசு, இந்திய அரசு, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச




அமைப்புக்கள் உள்ளிட்ட பிற அமைப்புகள் மூலம் நிதி வழங்கப்படுகிறது.

2009 ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 08 மாவட்டங்களில் மேலும் 16,759 வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று இனங்காணப்பட்டுள்ளன.

குறித்த திட்டத்தின் ஆரம்பத்தில் 550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட 1,100,000 ரூபா மற்றும் 340 சதுர அடி வீடுகளை அமைப்பதற்கு 650,000 ரூபா எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய விலைகளுக்கு அமைய, கட்டட நிர்மாண மூலப்பொருள்களின் தற்போதைய விலைகளுக்கு அமைய 550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட1,600,000 ரூபா மற்றும் 340 சதுர அடி வீடுகளை அமைப்பதற்கு 950,000 ரூபா எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2025 ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வகையில் நிரந்தர வீடமைப்பு திட்டத்தை நிர்மாணிக்கும் அடிப்படையில் அரசால் வழங்கப்படும் உதவிப் பணத்தை பின்வரும் வகையில் அதிகரிப்பதற்கு நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அதன்படி, 550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக அரச நிதியில் வழங்கப்படும் உதவிப் பணத்தை 1,500,000 ரூபாவரை அதிகரித்தல் மற்றும் 340 சதுர அடி வீட்டை அமைப்பதற்காக அரச நிதியில் வழங்கப்படும் உதவிப் பணத்தை 900,000 ரூபா வரை அதிகரித்தல் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பொன்னாலை பாலத்தில் கடலுக்குள் பாய்ந்த ஹயஸ்!

யாழ்ப்பாணம், பொன்னாலை பாலத்தடியில் இடம்பெற்ற விபத்தில் ஹையேஸ் ரக வாகனம் ஒன்று சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் இன்று (03) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

காரைநகரில் இருந்து மிருசுவில் நோக்கி பயணித்த இந்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தில் இருந்து கடலுக்குள் பாய்ந்துள்ளது.

இந்த நிலையில் வாகனம் பாரிய அளவில் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. வாகனத்தில் சாரதி மாத்திரம் இருந்துள்ளார்.

உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டன

ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட முத்தையன்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் பலசரக்குக் கடைகள் மற்றும் தேநீர் கடைகள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த சம்பவம் நேற்று (02) இடம்பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட முத்தையன்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள பலசரக்குக் கடைகள் மற்றும் தேநீர் கடைகள் மீது நேற்றையதினம் சுகாதாரப் பரிசோதகர்களால் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற வகையில் இருந்த உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டுச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன.

அத்தோடு கடை உரிமையாளர்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்ட



தோடு, உணவு ஸ்தாபனங்கள் மற்றும் பலசரக்கு கடைகள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகளும் பொது சுகாதாரப் பரிசோதகர்களால் டுத்துக் கூறப்பட்டிருந்தது.

முத்தையன்கட்டு பொதுச் சுகாதார பரிசோதகர் லோஜிதன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நதிருசன், டிலக்சன் ஆகியோரும் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக ஒவ்வொரு மாதமும் ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவில் உணவகங்கள் மற்றும் பலசரக்குக் கடைகள் பரிசோதனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மாரவிலவில் ஒருவர் கொலை!

**(உடப்பு க.மகாதேவன்)**

மாரவில, கட்டுனேரிய புனித அந்தோணி மாவத்தை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை (02) மாலை இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் கட்டுனேரிய பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவராவார். தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் 24 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# அவிசாவளை எலிஸ்டன் தோட்ட இளைஞன் தாக்கப்பட்டமையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

அவிசாவளை எலிஸ்டன் தோட்ட பகுதியில் உள்ள இளைஞன் ஒருவர் மீது தோட்டகள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது 'வைக்காதே வைக்காதே ஆலயத்தின் மீது கால் வைக்காதே', 'அடிக்காதே அடிக்காதே தொழிலாளர்களை அடிக்காதே' போன்ற கோஷங்கள் பதாதைகளையும் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அவிசாவளை எலிஸ்டன் தோட்ட மேல் பிரிவு இளைஞர் மீது தோட்ட கள உத்தியோகஸ்தர்களால் தாக்கப்பட்ட இளைஞன் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, குறித்த பகுதியில் உள்ள சிறுவர் பாராமரிப்பு நிலையத்தை அகற்றுமாறும் ஆர்ப்பாட்டகாரர்கள் வலியுறுத்தினர். சிறுவர் பாராமரிப்பு நிலையத்தை தோட்ட நிர்வாகம் அலுவலகமாகப் பயன்படுத்தி வருவதாகவும் அதனை தங்களுக்கு மீள தருவதாக வாக்குறுதி வழங்கியபோதும் அதனை தமக்கு இன்னும் வழங்கவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

குறித்த இளைஞன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பின் பணிப்புரையின் பேரில், பிரதி அமைச்சரின் பிரதிநிதிகள், சீதாவக்கை பிரதேச சபை உறுப்பினர்களான பிரேமநாத் ஜெயரத்தின, பாலித்த பாலசூரிய, விஜயகுமார் மற்றும் ஒருங்கிணைப்பாளர் கமல் ஆகியோர் எலிஸ்டன் தோட்ட மேல் பிரிவுக்குச் சென்றிருந்த வேளையில் தோட்ட மக்கள் அவ்விடத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த சிறுவர் பராமரிப்பு நிலையத்தை அகற்றுமாறும் இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் தோட்டப்புறங்களில் இடம்பெறக் கூடாது என்ற கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.




# கடல் தீர்த்தம் எடுத்து கல்யாணக்கால் முறித்தலுடன் காரைதீவு கண்ணகை திருக்குளிர்த்தி ஆரம்பம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்பாளின் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு பாரம்பரியமான கடல் தீர்த்தம் எடுத்து கல்யாணக்கால் முறித்தலுடன் நேற்று (2) திங்கட்கிழமை மாலை ஆரம்பமாகியது.

ஆலயதர்மகர்த்தார்களான இரா. குணசிங்கம் எஸ்.நமசிவாயம் சா.கனகசபேசன் , கப்புகன்மார் மற்றும் ஆலய பிரதிநிதிகள் பக்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கடல் தீர்த்தம் எடுத்து வரும் வழியில் கல்யாணக்கால் (பூவரசு மரக்கிளை) முறித்து அதனை நடைபாவாடை விரித்து ஆலயத்துக்குக் கொண்டுவந்து பாரம்பரிய சம்பிரதாயங்களை கடைப்பிடித்து பெண்கள் பட்டுச் சேலைகளை நேர்த்தி செய்து அரோஹரா கோசம் முழங்க கல்யாணக்கால் நடப்பட்டது.

பின்னர் பக்தர்கள் பலகாரம் தொடக்கம் மணத் தாம்பூலம் வரை படைத்து வழிபட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிந்தனர்.

இவ்வாறு மரபு வழியாக நேற்று மாலை ஆரம்பமாகிய திருக்குளிர்த்தி சடங்கு 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையவுள்ளது.



# குருக்கட்டு அரசடி விநாயகர் திருவிழா

(வடமராட்சி நிருபர்)

பருத்தித்துறை, அல்வாய் வடக்கு, திருவருள்மிகு குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 09 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் இரவு சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

11 ஆம் திருவிழாவான தேர்த் திருவிழா 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கும், 12 ஆம் திருவிழாவான சமுத்திர தீர்த்தத் திருவிழா 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 7 மணிக்கும் நடைபெறவுள்ளன.

இந்தப் பெருந் திருவிழாவை ஆலய பிரதமகுரு சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ நாராயண சண்முகநாதக்குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வருகின்றார்.

# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை 20ஆம் திகதியே திறக்கப்படும்!

## அம்பாறை அரச அதிபர் சிந்தக தெரிவிப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாத யாத்திரீகர்களுக்கான காட்டுப் பாதை எதிர்வரும் 20 ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஜூலை 04 ஆம் திகதி மூடப்படும் என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருடாந்தம் வடமாகாணம் தொடக்கம் சகல பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான அடியார்கள் காட்டுப் பாதை ஊடாகக் கதிர்காம உற்சவத்துக்கு செல்வது வழக்கம். கடந்த வருடம் சுமார் 35 ஆயிரம் பேர் இந்தக் காட்டுப் பாதை ஊடாகப் பயணித்தனர்.

இந்த முறை சுமார் 30,000 பேரை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். 20ஆம் திகதி குமண காட்டுப் பாதை திறக்கப்படும்.

குமண யால வனங்கள் ஊடாகப் பயணிக்கும் பாத யாத்திரீகர்களுக்கு அவர்களுக்கான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.- என்றார்.






# டிக்கோயா கிளங்கன் ஆஸ்பத்திரியின் குறைபாடு வெகுவிரைவில் தீர்க்கப்படும்

## நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பாக மத்திய மாகாண ஆளுநருடன் கலந்துரையாடவுள்ளோம். விரைவில் ஆஸ்பத்திரியின் குறைபாடுகள் தீர்க்கப்படும்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஸ்ணன் கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் நிலவி வரும் குறைபாடுகள் தொடர்பாக கண்டறிந்து கொள்வதற்கு நேரடி விஜயமொன்றை நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள சுரவீர ஆராச்சி மற்றும் கிருஸ்ணன் கலைச்செல்வி ஆகியோர் மேற்கொண்ட விஜயத்தின் போது குறித்த வைத்தியசாலையின் நிறைகுறைகளை அறிந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மலையக பெருந்தோட்ட பகுதிகளை பொருத்த வரையில் 4 லட்சம் பேர் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையையே நாடி வருகின்றனர். கிளங்கன் வைத்தியசாலையில் 10 கட்டில்கள் இருக்கும் பட்சத்தில் 30 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுபோன்ற பல்வேறு குறைபாடுகளை இன்றைய தினம் எமக்கு கண்டறியக் கிடைத்தது.

இது தொடர்பாகத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக மேலதிக கலந்துரையாடல் ஒன்றை வெகு விரைவில் மத்திய மாகாண ஆளுநர் மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் ஆகியோருடன் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 11 ஆம் திகதி இது தொடர்பில் கலந்துரையாட உள்ளோம் என்றும் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் இயங்கும் அனைத்து வைத்தியசாலைகளிலும் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி தீர்வு பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையை பொறுத்த வரையில் எதிர்வரும் காலங்களில் இங்கு காணப்படும் குறைபாடுகளை சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்று பாரிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்த வைத்தியசாலையைப் பொறுத்தவரையில் மலையக பெருந்தோட்ட மக்கள் அனேகமானோர் நாளாந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையை நாடி வருகின்றனர்.

எனவே மலையக பெருந்தோட்ட வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு எமது அரசு வெகு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.-என்றார்.

# தம்பசிட்டி மகாமாரி மஹா கும்பாபிஷேகம்

(வடமராட்சி நிருபர்)

பண்டாரி அம்மன் கோவில் என அழைக்கப்படும் பருத்தித்துறை தம்பசிட்டி ஸ்ரீமகாமாரி அம்பாள் திருக்கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பட்சஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.23 மணி மதல் 8.30 மணிவரையிலான சுபமுகூர்த்த வேளையில் நடைபெற உள்ளது.

இந்தக் கும்பாபிஷேக கிரியைகள் 5 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன. 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்தக் கும்பாபிஷேகத்தை ஆலய பிரதமகுரு வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ சபா.பாஸ்கரக்குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆசியுரைகளை பொலிகண்டி கந்தவனம் திருக்கோவில் பிரதமகுரு குருமணி சிவப்பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக் குருக்கள், நாயன்மார்கட்டு தேசமான்ய து.மகாசிவக்குருக்கள், கரணவாய் மூத்த விநாயகர் திருக்கோவில் பிரதமகுரு சிவ பூஜாதுரந்தர் சிவஸ்ரீ செ.கைலாசநாதக்குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.



# நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் நினைவு சுமந்த நிகழ்வுகள் சுவிஸில்!

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 37ஆவது ஆண்டு நினைவெழுச்சி நாளினை நினைவு கூர்ந்து சுவிஸில் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் உதைபந்தாட்டம், மென்பந்து துடுப்பாட்டம், கரப்பந்தாட்ட போட்டிகளுடன் சிறுவர்களுக்கான சுவட்டு மைதான மெய்வல்லுனர் போட்டிகளும் நடைபெற்றன.

அனைத்துப் போட்டிகளிலும் வீரர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற கழகங்களைச் சேர்ந்த வீரர்களுக்கான பதக்கங்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

















# காத்தான்குடியில் இடம்பெற்ற போதை எதிர்ப்பு தின நிகழ்வு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான், மட்டக்களப்பு)**

போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம், வலுவான தேசம் ஒன்றைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் புதிய காத்தான்குடி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

வங்கி முகாமையாளர் எஸ்.எச்.எம். முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா மஹ்ஜுூத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வங்கி தலைமையக முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ், காத்தான்குடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஏ.எம்.சுல்மி, சமூதாம் சார் சீர் திருத்த உத்தியோகத்தர் எம்.எம்.ரஸுூல் ஷா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மௌலவி எம்.எச்.எம்.ஜிப்ரி (மதனி) ஆன்மீக உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி சமுதாய உறுப்பினர்களால் புகைத்தல் மற்றும் போதை பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கொடிகள் அணிவிக்கப்பட்டன.

சமுர்த்தி வங்கி மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# நுவரெலியா உள்ளூராட்சி சபைகளது உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்

(மஸ்கெலியா)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில், நுவரெலியா மாவட்டத்துக்கான உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களுடான கலந்துரையாடல் இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையிலும், தவிசாளரும் நிதிச்செயலாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரனின் பங்கேற்புடனும் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் நேற்று இடம்பெற்றிருந்தது.

இதன் போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுடன் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக முதன் முறையாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களுடன் கட்சியுடனான கோட்பாடு மற்றும் அணுகுமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்த முறை நடந்து முடிந்த 2025 உள்ளூராட்சித் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் சேவல் சின்னத்தில் தனித்து போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 39 உறுப்பினர் எண்ணிக்கையை பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் நோர்வூட் பிரதேச சபையில் 06 உறுப்பினர்கள், கொட்டகலை பிரதேச சபையில் 05 உறுப்பினர்கள், அக்கரபத்தனை பிரதேச சபையில் 04 உறுப்பினர்கள், ஹட்டன்- டிக்கோயா நகர சபையில் 02 உறுப்பினர்கள், அம்பகமுவ பிரதேச சபையில் 02 உறுப்பினர்கள், தலவாக்கலை-லிந்துலை நகர சபையில் 02 உறுப்பினர்கள், நுவரெலியா பிரதேச சபையில் 06 உறுப்பினர்கள், நுவரெலியா மாநகர சபையில் 02 உறுப்பினர்கள், கொத்மலை பிரதேச சபையில் 08 உறுப்பினர்கள், ஹங்குரான்கெத்த பிரதேச சபையில் 02 உறுப்பினர்கள் என மொத்தமாக 39 உறுப்பினர்களை பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வலப்பனை பிரதேச சபையில் நாற்காலி சின்னத்தில் போட்டியிட்டு 02 உறுப்பினர்களையும் பெற்றுள்ளது.

விசேடமாக இவர்களில் 32 ஆண் உறுப்பினர்களும், 09 பெண் உறுப்பினர்களும் இதில் உள்ளடங்குகின்றார்கள்.

மஸ்கெலியா பிரதேச பிரதேச சபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த 39 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. மஸ்கெலியா பிரதேச சபைக்கான வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்குமாயின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கும் என்று இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது.



# தற்போதைய அரசு வடக்கு, கிழக்கில் மிக மோசமாகக் காணிகள் அபகரிப்பு

## கிழக்கு திட்டவரைவு ஒன்றியத்தின் நிர்வாகி இராசலிங்கம் தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

முன்னைய அரசுகளை விட மோசமான முறையில் தற்போதைய அரசு வடக்கு, கிழக்கில் தமிழர்களின் காணிகளை அபகரித்து வருகின்றது. முன்பு போலவே தற்போதைய அரசும் தமிழர் விரோதப் போக்குடனேயே செயல்படுகின்றது. காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் மிக வேகமாக நடைபெறுகின்றன.

திருகோணமலையில் வைத்து ஊடகங்களை சந்தித்த கிழக்கு மாகாண திட்டவரைவு ஒன்றியத்தின் நிர்வாகி கணபதிப்பிள்ளை இராசலிங்கம் இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வாகரை பிரதேசத்தில் உள்ள கட்டுமுறிவு வீதியின் 4 ஆம் கட்டையில் நீண்டகாலமாகச் சேனைப்பயிர் செய்கையில் ஈடுபட்டு வந்த விவசாயிகளின் குடிசைகள் வனவளத் திணைக்கள அதிகாரிகளால் எரிக்கப்பட்டுள்ளன.

சேனைப்பயிர்கள் தீ வைத்து கொழுத்தப்பட்டுள்ளது.மிகவும் வறிய நிலையில் உள்ள விவசாயிகள் இதனால் பாதிக்கபட்டுள்ளனர்.அவர்களின் வாழ்வாதாரம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்து அந்த விவசாயிகளைப் பயமுறுத்தி அங்கிருந்து வெளியேற்றும் முயற்சி நடைபெற்றுள்ளது.

இவ்வாறு பாதிப்புக்களை ஏற்படுத்தியவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான எவ்வித உதவித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால் குறிப்பிட்ட இடங்களில் உள்ள காணிகளில் அரச திணைக்கள எல்லைக் கற்களை இட்டு வருகின்றனர். இது அப்பட்டமான நில அபகரிப்பு.

இதேபோன்று வெருகல் பிரதேசத்தின் கல்லரிப்பு பிரதேசம், கற்பிட்டிமலை என்ற மேட்டுப் பகுதி ஆகியவற்றில் தொல்பொருள் திணைக்களம் அங்கு தொல்பொருள் சின்னங்கள் உள்ளன எனக் கூறி அடையாளப்படுத்தி வருகின்றது. இதனால் அங்குள்ள மக்களின் விவசாய நிலங்கள் பறிபோகும் நிலை உருவாகியுள்ளது.

ஒரு சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலை தங்கநகர் கிராமத்தில் உள்ள குடியிருப்பு காணியில் தொல்பொருள் சின்னங்கள் உள்ளன என்று கூறினர். பின்னர் அந்த திணைக்களத்தினர் அங்கு சென்று நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை, முத்துநகர் மற்றும் சம்பூர் பிரதேசங்களில் விவசாயிகளின் காணிகள் அரச வர்த்தமானி மூலம் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் முழுமையான விவசாய காணிகள். இதனால் இங்கு விவசாயம் செய்து வந்த விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.




இவ்வாறு மாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயிகளுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. ஆட்சிக்கு வந்தபோது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம், மாற்றுவோம் என்று கூறியவர்கள் இப்போது அதனை மறந்து மிக மோசமாக விவசாயிகளைப் பாதிப்புக்கு ஆளாக்கி வருகின்றனர். முன்னைய அரசுகளை விட மிக மோசமான முறையில் புதிய அரசு வடக்கு, கிழக்கு பகுதியில் தமிழர்களின் காணிகளை அபகரித்து வருகின்றது.

இந்தத் திட்டமிட்ட காணி அபகரிப்பை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாவிடில் நாங்கள் அதற்கு எதிராகப் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை விரைவில் நடத்துவோம்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வடக்கு, கிழக்கிலும் தேவையாயின் நாடளாவிய தேசிய ரீதியாகவும் நடத்துவதற்கு எண்ணியுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மகாவலி திட்டத்தின ஊடாக நீண்ட காலமாக மேய்ச்சல் தரைப் பிரச்சினை உருவாக்கப்பட்டது. இப்பிரச்சினை மகாவலி திட்டத்தின் ஊடாகவே தீர்க்கப்பட வேண்டும் என அரசு கூறுகின்றது.

ஆனால் மகாவலி திட்டம் இந்தப் பகுதியில் நிறுத்தப்பட வேண்டும் என்பதே விவசாயிகளின் முடிவாகும். தற்போதைய அரசு ஆட்சிக்கு வர முன்னர் கூறியது மகாவலி திட்டத்தை இங்கு நிறுத்த வேண்டும் என்று. ஆனால் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்தித் தமிழர்களின் காணிகளை அபகரிக்க அரசு முயற்ச்சிக்கின்றது. அதன் மூலம் இங்கு இனப்பரம்பலை மாற்றி அமைக்க அரசு முயற்சிக்கின்றது. மாற்றத்துக்காக வடக்கு, கிழக்கு தமிழர்கள் இந்த புதிய அரசுக்கு வாக்களித்தார்கள். ஆனால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். நம்பிக்கை இழந்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது காணப்படும் விவசாயிகளின் காணிப் பிரச்சினைகள், தமிழர் பிரதேசங்களின் சைவ ஆலயங்கள் பௌத்த மயமாக்கப்படுவது மற்றும் வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்பன தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடத்தாக கையகப்படுத்துவது என்பவை தொடர்பில் இணைந்து எதிர்ப்பை வெளியிடுவது, அதனைத் தடுப்பது, உரியவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பது என்பவற்றை நோக்காக கொண்டு தாம் மிக விரைவில் மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம்.- என்றார்.

தேசிய மட்டத்தில் இயங்கும் "காணி மற்றும் விவசாய சீர்திருத்த அமைப்பு" என்ற அமைப்பு, மாகாண மட்டத்தில் காணப்படும் விவசாய மற்றும் மீன்பிடித்துறை சார்ந்த பிரச்சினைகளையும், இந்தப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் மீனவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதை இலக்காகக் கொண்டும் அனைத்து மாகாணங்களிலும் மாகாண மட்டத்தில் சுயாதீனமாக இயங்கும் திட்ட வரைபு ஒன்றியங்களை உருவாக்கியுள்ளது.




# பொலித்தீன் பாவனைகளை இல்லாதொழிக்க நடைபவனி!

## யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு

(எஸ். நிதர்ஷன்)

இலங்கைத்தீவில் பொலித்தீன் பாவனையை முற்றாக இல்லாதொழிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபவனி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது என்று SAFE LIFE அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட இணைபாளர் சுதர்சிகா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று (03) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பொலித்தீன் பாவனையால் இன்று மானிதர்கள் மட்டமல்ல விலங்குகள் கடல் வாழ் உயிரினங்களது வாழ்வியலும் கேள்விக்குறியாகியுள்ளது.

குறிப்பாக ஒரு நாள் பாவனை பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் குவளைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் உள்ளிட்டவற்றை மக்கள் பாவனையில் இருந்து இல்லாதொழிப்பது அவசியமாகும்.

ஆனாலும் ஆபத்து என்று தெரிந்தும் பாவனையாளர்கள் அந்த பாவனையில் இருந்து விடுபடுவதாகத் தெரியவில்லை.

சில பொலித்தீன்கள் ஒன்று மண்ணுள் புதையும் போது அது உக்கலடைய 1000 ஆண்டுகள் செல்கின்றன. இதனால் பல்வேறு தாக்கங்களை உயிரினங்கள் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

அந்தவகையில் பொலித்தீன்களால் ஏற்படும் தாக்கத்தை கட்டுப்படுத்துவது சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

அதனடிப்படையில் நாம் முன்னெடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். பொது நூலக பின் நுழைவாயில் முன்பாக நடைபவனி ஆரம்பிக்கப்பட்டு நூலகத்தின் பிரதான நுழைவாயில் வரை நடைபெறவுள்ளது.

இதில் மாணவர்கள் பொது நலன் விரும்பிகள் என பலரும் கலந்து நிகழ்வை வலுப்படுத்தி விழிப்புணர்வின் நோக்கத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல ஒத்துழைக்க வேண்டும்.- என்றார்.

## இலக்கிய கலாநிதி வித்துவான் அமரர் சா.இ.கமலநாதனின் நூற்றாண்டு விழா நிகழ்வு!

(அபு அலா)



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் அறிஞர்களில் ஒருவரும், கிழக்குப் பல்கலைக்கழக இலக்கிய கலாநிதி பட்டம் பெற்றவருமான வித்துவான் அமரர் சா.இ.கமலநாதனின் நினைவு நூற்றாண்டு விழா நிகழ்வு (07) சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்தும் இந்த நினைவு நூற்றாண்டு விழா, கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி அ.அ.நவரத்தினம் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவின்போது ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி சி.மௌனகுருவால் 'பன்மைத்துவர் கௌரவ இலக்கிய கலாநிதி வித்துவான் சா.இ.கமலநாதன்' என்ற நூல் வெளியீடும் செய்யப்படவுள்ளது.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுபா சக்கரவர்த்தி உள்ளிட்ட கல்வியியலாளர்கள், கலை இலக்கிய வாதிகள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கிளிநொச்சி மருதநகர் பகுதியில் 3 கிலோ கஞ்சா மீட்பு; ஒருவர் கைது!

கிளிநொச்சி மருதநகர் பகுதியில் 3 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதநகர் பகுதியில் இன்று (03) குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதிகாலையில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதநகர் பகுதியில் பாழடைந்த வீடு ஒன்றில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று இராணுவ புலனாய்வு துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இராணுவ புலனாயத் துறையினர் பொலிஸாருக்கு இது தொடர்பில் அறிவித்ததை அடுத்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பொலிஸ்மா அதிபரின் கீழ் உருவாக்கப்பட்ட சிறப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர்.

இதன் போது மூன்று பொதிகளில் கஞ்சாவை மீட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

# ‘தக் லைவ்’ படத்தை திரையிட பாதுகாப்பு கோரி கர்நாடக உயர் நீதிமன்றத்தில் கமல்ஹாசன் மனு




‘தக் லைவ்’ திரைப்படம் கர்நாடகாவில் சுமுகமாக வெளியிடப்படுவதை உறுதி செய்வதற்கு உரிய பாதுகாப்பு கோரி நடிகர் கமல்ஹாசன் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சென்னையில் அண்மையில் நடைபெற்ற ‘தக் லைவ்’ திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய கமல்ஹாசன், ‘தமிழ் மொழியில் இருந்து கன்னடம் பிறந்தது’ என்று கூறி இருந்தார். கமல்ஹாசனின் இந்தக் கருத்துக்கு எதிராக பல்வேறு கன்னட அமைப்புகள் பெலகாவி, மைசூர், பெங்களூர் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. தனது கருத்துக்காக கமல்ஹாசன் கன்னட மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், மன்னிப்பு கேட்கத் தவறினால், ‘தக் லைவ்’ திரைப்படம் கர்நாடகாவில் திரையிடப்படுவதைத் தடுப்போம் என்றும் அவர்கள் மிரட்டினர்.

இந்நிலையில், தொடர்ச்சியாக, நடிகர் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் சார்பில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில், “தமிழ்நாடு மற்றும் கர்நாடக மக்களிடையே ஒற்றுமை மற்றும் பரஸ்பர மரியாதையை ஏற்படுத்தும் வகையில் பேசிய நடிகர் கமலின் கருத்து திரிக்கப்பட்டுள்ளது. கர்நாடகாவில் படம் திரையிடப்படுவதைத் தடுக்கவோ அல்லது தடை செய்யவோ எந்தவொரு தனி நபர், குழு அல்லது அதிகாரத்தையும் தடை செய்ய உத்தரவிட வேண்டும். திரைப்படத் தயாரிப்பாளர், நடிகர்கள், திரையரங்க உரிமையாளர்கள் மற்றும் பார்வையாளர்களை அச்சுறுத்தல்கள் அல்லது இடையூறுகளிலிருந்து பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க உத்தரவிட வேண்டும்.” என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மாநிலங்களவை தேர்தல் வேட்புமனு தொடங்கியது: முதல் நாளில் சுயேச்சைகள் இருவர் மனுதாக்கல்

தமிழகத்தில் மாநிலங்களவையில் வெற்றிடமாக உள்ள 6 இடங்களுக்கான தேர்தலில், தெலுங்கானாவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 2 பேர் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

மாநிலங்களவைத் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் நேற்று தொடங்கியது. ஜூன் 9 ஆம் திகதி வரை மனுத்தாக்கல் செய்யலாம். முதல் நாளான நேற்று தேர்தல் நடத்தும் அதிகாரி பா.சுப்பிரமணியம் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி கே.ரமேஷ் ஆகியோரிடம் 2 சுயேச்சைகள் மனுத்தாக்கல் செய்தனர்.



அதில் ஒருவர், அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட மனுத்தாக்கல் செய்யும், சேலம், மேட்டூரைச் சேர்ந்த கு.பத்மராஜன். இது இவர் தாக்கல் செய்யும் 249 ஆவது மனுவாகும்.

அதே போல், தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத், மேட்சல்- மகாஜகிரியைச் சேர்ந்த கண்டே சயன்னா என்பவரும் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இருவரும் எம்.எல்.ஏக்கள் முன்மொழிவை வழங்கவில்லை. மாநிலங்களவை எம்.பி.யாக தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு 34 எம்.எல்.ஏக்களின் ஆதரவு இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஜூன் 9 ஆம் திகதி மனுத்தாக்கல் செய்ய உள்ளனர்.

# உதயநிதி ஸ்டாலினுக்கு காய்ச்சல்; கட்சி நிகழ்ச்சிகள் தள்ளிவைப்பு

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு காய்ச்சல், தொடர் இருமல் இருப்பதால் அவரது அரசு மற்றும் கட்சி நிகழ்ச்சிகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கடும் காய்ச்சல் மற்றும் தொடர் இருமலால் அவதிப்பட்டு வருகிறார். அடுத்த சில நாள்களுக்கு அவர் ஓய்வில் இருக்க வேண்டும் என்று மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார்.

அதனால், அவர் கலந்துகொள்ள



இருந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் தள்ளிவைக்கப்படுகின்றன என தமிழக அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, உதயநிதியின் உடல்நலம் தேறி விரைவில் குணமடைய வேண்டும் என அரசியல் தலைவர்களும், அவரது ஆதரவாளர்களும், பொதுமக்களும் தெரிவித்து வருகின்றனர்.

உதயநிதி ஸ்டாலின் பூரணமாக குணமடைந்த பிறகு, தள்ளி வைக்கப்பட்ட அரசு மற்றும் தி.மு.க. நிகழ்ச்சிகளுக்கான புதிய திகதிகள் அறிவிக்கப்படும் என்று கட்சியினர் தெரிவித்தனர்.




### 2 ஆம் சுற்று சமாதான பேச்சு:

# இஸ்தான்புல் சென்றனர் ரஷ்ய, உக்ரைன் பிரதிநிதிகள்

ரஷ்ய மற்றும் உக்ரைனிய பிரதிநிதிகள், இரண்டாவது சுற்றுச் சமாதான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக இஸ்தான்புல் சென்றுள்ளனர்.

இரு தரப்புக்கும் இடையே நேற்றிரவு பரஸ்பர வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்ட நிலையில், இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக, உக்ரைனின் பிரதி வெளிவிவகார அமைச்சர் செர்ஜி கிஸ்லிட்சியா ஜேர்மனி, இத்தாலி மற்றும் இங்கிலாந்து உயர்மட்ட பிரதிநிதிகளை சந்தித்து உரையாடியுள்ளார் என உக்ரைனின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.




இரு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையேயான நேரடி சந்திப்பு மற்றும் முழு அளவிலான யுத்த நிறுத்தம் உள்ளிட்ட விடயங்களை, உக்ரைன் மீண்டும் வலியுறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் இஸ்தான்புலில் இடம்பெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில் யுத்த கைதி பரிமாற்றத்தைத் தவிர, வேறு எந்த குறிப்பிடத்தக்க முடிவும் எட்டப்படவில்லை.

எனினும், இன்றைய கூட்டத்திற்கு முன்னர் ரஷ்யா தனது நிபந்தனைகளை வெளியிடவில்லை. இந்த நிலையில், உக்ரைனின் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, லித்துவேனியாவில் இடம்பெறும் நேட்டோவின் உறுப்பினர்களுடனான உச்சி மாநாட்டிற்காக அங்கு சென்றுள்ளார்.

இந்த உச்சி மாநாட்டிற்கு முன்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி, தொடர்ந்து இடம்பெற்று வரும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள உண்மையான வாய்ப்பு இதுவென தெரிவித்துள்ளார்.

### அணுசக்தி பிரச்சினை:

# அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட திட்டத்தினை நிராகரிக்கவுள்ள ஈரான்

பல தசாப்த கால அணுசக்தி பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட திட்டத்தினை ஈரான் நிராகரிக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானிய இராஜதந்திரி ஒருவரினால் இந்த தகவல் றொய்ட்டர்ஸ் செய்தி சேவைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் திட்டம், ஈரானிய நலன்களை நிவர்த்தி செய்யும் வகையிலோ அல்லது யுரேனியம் செறிவூட்டல் குறித்து அமெரிக்காவின் நிலைப்பாட்டை மென்மையாக்கும் தன்மை கொண்டதாகவோ இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



புதிய அணுசக்தி ஒப்பந்தத்திற்கான அமெரிக்க முன்மொழிவை, ஓமானின் வெளியுறவுத்துறை அமைச்சர் சையித் பத்ர் அல்புசைடி கடந்த வாரம் கையளித்திருந்தார்.

அவர் ஈரானிற்கும், அமெரிக்காவிற்கும் இடையேயான அணுசக்தி பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் செய்து வருகின்றார்.

ஈரானிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மத்திய கிழக்கு விசேட பிரதிநிதி ஆகியோருக்கு இடையே இந்த விடயம் தொடர்பாக, 5 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும், பல முரண்பாடுகள் காரணமாகப் பல தடைகள் ஏற்பட்டு வருகின்றன.

குறிப்பாக, யுரேனிய செறிவூட்டலைக் கைவிட வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை ஈரான் நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
பக்கம் 03
செவ்வாய்க்கிழமை | 03/06/2025

## தபால் சேவைகள் முடங்கும் அபாயம்

கனடாவில் தபால் சேவைகள் முடங்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. கனடாவின் தபால் திணைக்களத்திற்கும் தொழிற்சங்கங்களுக் 02



# கனடாவில் பற்றியெரியும் காட்டுத்தீ; போராடிவரும் தீயணைப்புப் படை

## 25,000 இற்கும் அதிகமானோர் வெளியேற்றம்

**கனேடிய மாகாணங்கள் மூன்றில் காட்டுத்தீ பற்றியெரிந்துகொண்டிருக்கும் நிலையில், அதைக் கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் போராடிவரு கிறார்கள்.**

**கனடாவின் மனித்தோபா, ஆல்பர்ட்டா மற்றும் சஸ்காட்செவன் ஆகிய மூன்று மாகாணங்களில் காட்டுத்தீ பற்றியெரிகிறது.**

**காட்டுத்தீ காரணமாக மூன்று மாகாணங்களிலுமாக சுமார் 25,000 பேர் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.**

அதிகபட்சமாக, மனித்தோபாவில் சுமார் 17,000 பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். அங்கு அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து சஸ்காட்செவன் மாகாணத்தில் சுமார் 8,000 பேரும் ஆல்பர்ட்டாவில் சுமார் 1,300 பேரும் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

காட்டுத்தீ காரணமாக கனடாவிலும், கனடா எல்லையிலுள்ள சில அமெரிக்க மாகாணங்களிலும் காற்றின் தரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், புகை சூழ்ந்தும் காணப்படுவதால் சாலைகளில் பயணிக்க இயலாத நிலையும் உருவாகியுள்ளது.

கனடாவைப் பொருத்தவரை, மே முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டம் காட்டுத்தீ பரவும் காலகட்டமாகும்.

என்றாலும், 1990 களுக்குப் பிறகு, காட்டுத்தீ காரணமாக இவ்வளவு மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்படுவது இப்போதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.





# அதிவேக நெடுஞ்சாலைகளுக்கான கட்டணம் ஒன்டாரியோவில் நீக்கம்

ஒன்றாரியோ மாகாணத்தின் அதிவேக நெடுஞ்சாலைகளுக்கான கட்டணங்கள் நீக்கப்பட்டுள்ளன. இறுதியாக 407 கிழக்கு நெடுஞ்சாலையில் பயணிப்பதற்கான கட்டணம் நீக்கப்பட்டுள்ளது.

மாகாணத்திற்கு சொந்தமான பகுதி முழுவதிலும் கட்டணம் (தொடர்வழி பயணக் கட்டணம்) அதிகாரப்பூர்வமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஒன்டாரியோ முதல்வர் டக் ஃபோர்ட் தனது முக்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிக்கரிங்கில் உள்ள ப்ராக் சாலை முதல் கிளாரிங்டனில் உள்ள நெடுஞ்சாலை 35/115 வரை உள்ள பிரிவில், இனி பயணிகள் எந்தவொரு கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் டக் ஃபோர்ட் அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் கட்டண நீக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாகாண போக்குவரத்துத் துறை அமைச்சர் ப்ரப்மீத் சர்காரியா தெரிவித்துள்ளார்.

முந்தைய ஆட்சி காலங்களில் அமல்படுத்தப்பட்ட கட்டண நீக்கங்களை முற்றிலும் நீக்கும் பணியில் இது இறுதி படி என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான 407 நெடுஞ்சாலைப் பகுதிகளில் டோல்கள் தொடரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்டாரியோ மாகாணத்திற்கு சொந்தமான நெடுஞ்சாலைகளில் இருந்து அனைத்து கட்டணங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண நீக்கத்தின் ஊடாக நாள்தோறும் பயணம் செய்யும் பயணிகள் ஓராண்டுக்கு 7200 டொலர்கள் வரையில் சேமிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.







## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கும் இடையிலான பேச்சுவார்த்தை தோல்வி அடைந்துள்ளது.

தொழிற்சங்கங்கள் முன்வைத்த யோசனையை கனடிய தபால் திணைக்களம் நிராகரித்துள்ளது. சுமார் 55000 பணியாளர்கள் இந்த தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நிலையில் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட சில கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் முன்வைத்திருந்தன.

இந்த கோரிக்கைகளை பரிசீலனை செய்த தபால் திணைக்களம் அவற்றை நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் தபால் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த போராட்டம் காரணமாக பொதிகள், கடித விநியோகம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இந்த நிலையில் மீண்டும் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதிக்க திட்டமிட்டுள்ளன.

இவ்வாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டால் மீண்டும் தபால் சேவைகள் முடங்கும் அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைப்பதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தமது கோரிக்கைகளை தபால் திணைக்களம் உதாசீனம் செய்வதாக தொழிற்சங்க தரப்பிலிருந்து குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுவரையில் இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# கனடாவின் பெரும்பாலான பகுதிகளில் துருவ ஒளியை பார்வையிடும் வாய்ப்பு

கனடாவின் பெரும்பாலான பகுதிகளில் துருவ ஒளி எனப்படும் வடதிசை ஒளிகளை நேரடியாக பார்வையிடும் அபூர்வ வாய்ப்பு உள்ளது.

அமெரிக்க தேசிய கடல்சார் மற்றும் வானிலை நிர்வாகம் (NOAA) இது தொடர்பில் முன்னறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பிரிடிஷ் கொலம்பியா, அல்பெர்டா, சாஸ்காசுவான், மனிடோபா, யுகோன் மற்றும் நார்த்வெஸ்ட் டெரிடோரிஸ் மாகாணங்கள் முழுவதும் இந்த ஒளிக்காட்சியை நேரில் பார்க்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்டோரியா, வென்கூவர், கால்கரி, எட்மண்டன், ரெஜைனா, சாஸ்காடூன், வின்னிபெக், யெல்லோநைஃப் மற்றும் வைட்ஹார்ஸ் ஆகிய நகரங்களும் இதில் உள்ளடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்டாரியோ, கியூபெக் மற்றும் அட்லாண்டிக் கனடாவின் பெரும் பகுதிகளிலும் வானத்தின் வடக்குப் பகுதியில் இந்த ஒளிக்காட்சியை காணக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இரவு 11 மணி முதல் அதிகாலை 2 மணி (EDT நேரம்) வரை இது உச்சக் கட்டத்திற்கு வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

NOAA வெளியிட்ட “view line” வரைபடத்தில், நியூஃபவுண்லாந்து, நோவா ஸ்கோஷியா மற்றும் தெற்கு ஒன்டாரியோவின் சில பகுதிகள் தவிர, அனைத்து மாகாணங்களும் இந்த ஒளிக்காட்சிக்கு உள்ளடங்குகின்றன. இந்தக் கோட்டிற்கு அருகில் இருப் பவர்களும் தெளிந்த, மாசற்ற வானம் மற்றும் வடக்கு திசையின் தடை யில்லா பார்வையுடன் இருந்தால் இதைப் பார்க்கலாம்.

நகரங்களின் மின்விளக்குகள் இந்த ஒளிக்காட்சிக்கு இடையூறு தரக்கூடியதாக இருப்பதால், நகர வெளிப் பகுதிகளுக்குச் செல்லுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# கனடாவில் புகலிடம் கோருகின்ற மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கனடாவில் புகலிடம் கோரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, இந்தியா, நைஜீரியா, கினியா, கானா மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளை சேர்ந்த மாணவர்கள் இதில் பெரும்பான்மையாக உள்ளனர் என்பது குறிப்பிடப்படுகின்றது.

2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 5,500 வெளிநாட்டு மாணவர்கள் கனடாவில் புகலிடம் கோரியுள்ளனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு அதே காலப் பகுதியை விட 22 சதவீதம் அதிகம் என IRCC (Immigration, Refugees and Citizenship Canada) தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் மட்டும் 20,245 மாணவர்கள் புகலிடம் கோரியுள்ளனர்.

இது 2023 ஆம் ஆண்டை விட இரட்டிப்பு மடங்கும், 2019 ஆம் ஆண்டை விட ஆறுமடங்கும் அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல மாணவர்கள் கனடாவுக்கு கல்வி நோக்கில் வந்தாலும், பொதுவாக குடியிருப்பு வாய்ப்புகள் குறைவதால் புகலிடம் ஒரு கடைசி வாய்ப்பாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.